**இறப்பர் கட்டுப்பாட்டு நிதியம் - 2016**

---

இறப்பர் கட்டுப்பாட்டு நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1957 இன் 45 ஆம் இலக்க இறப்பர் கட்டுப்பாட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட 1956 இன் 11 ஆம் இலக்க இறப்பர் கட்டுப்பாட்டு அதிகாரச்சட்டத்தின் (436 ஆவது அதிகாரம்) 39 (அ) (3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்கூறப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

## 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக ஐந்தொகையில் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத விடயங்கள் மற்றும் தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட ரூபா 1,864,559 தொகை இறப்பர் கட்டுப்பாட்டு நிதியத்திலிருந்து கழித்துக் காட்டுவதற்கு பதிலாக அது நடைமுறைச் சொத்தொன்றாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 635,271 கூட்டுத்தொகையான 13 நடைமுறைச் சொத்துக்களின் மீதிகள் 19 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் நிதிக்கூற்றுக்களில் மாற்றமின்றி முன்கொண்டு வரப்பட்டிருந்ததுடன் அந்த மீதியில் ரூபா 287,378 தொகையான தீர்க்கப்படாத முற்பண மீதிகளைத் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 239,784 கூட்டுத்தொகையான 05 நடைமுறைப் பொறுப்பு விடயங்களின் மீதிகள் 19 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டிருந்ததுடன் அதில் உள்ளடக்கப்பட்ட ரூபா 222,031 தொகையான செலுத்த வேண்டிய முற்பணத்தைத் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை**

பின்வரும் விடயங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்குரிய எந்தச் சான்றுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்வதற்கோ முடியாதிருந்தது.

| | **விடயம்** | **பெறுமதி** | **அவதானிப்புக்கள்** |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | நிலையான சொத்துக்கள் | 985,925 | - மெய்மையாய்வு அறிக்கை,<br>- நிலையான சொத்துக்கள் பதிவேடு |
| (ஆ) | நடைமுறைச் சொத்துக்கள் | 635,271 | - பட்டோலைகள்<br>- காலப்பகுப்பாய்வு,<br>- மீதி உறுதிப்படுத்தல் |
| (இ) | நடைமுறைப் பொறுப்புக்கள் | 239,784 | - பட்டோலைகள்<br>- காலப்பகுப்பாய்வு,<br>- மீதி உறுதிப்படுத்தல் |

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

நிதியத்தில் செயற்பாட்டு நடவடிக்கைகள் காணப்படாமையினால் மீளாய்வாண்டிற்காக நிதிச் செயலாற்றல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்பான தற்போதைய நிலைமை

2009 யூலை 23 ஆந் திகதி நடைபெற்ற அரசாங்கக் கணக்குகள் குழு கூட்டத்தின் போது நிதியத்தைக் கலைப்பதற்கு கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் அதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனம் 2016 பெப்ரவரி 26 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2016 மார்ச் 09 கிடைத்த அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கலைப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் கலைப்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. நிதி அமைச்சின் அவதானிப்புக்களுக்கு இணங்க சட்டவரைவு தயாரிப்பாளரின் ஒத்துழைப்புடன் நிதியத்தின் நடவடிக்கைகளை கலைப்பதற்குத் தேவையான நியதிச்சட்ட வரைவு, 2017 யூன் 30 ஆந் திகதியிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

நிதியம் இறுதியாக செயற்படு நிலைமையில் காணப்பட்ட 1997 ஆம் ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஐந்தொகையிலிருந்து மீளாய்வாண்டு ஐந்தொகை வரை முன்கொண்டு வரப்பட்டிருந்த கலைப்பதற்கு உட்படக்கூடிய நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களுக்குரிய நிறுவனங்கள் தற்போது செயற்படாத நிலைமையில் இருப்பது இனங்காணப்பட்டமையால் ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டிருந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் உள்ளவாறு மற்றும் நியாயமாக நிரூபணமாகும் கணக்கு உருப்படிகள் அல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 107 நாட்கள் தாமதித்து 2017 யூன் 15 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. நிலையான சொத்துக்கள் மற்றும் பெறவேண்டிய / செலுத்த வேண்டிய மீதிகளை தீர்த்துவைத்தல் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகிறன.